778

பரமப...

டி. ஜி. ஜெகநாதநாயுடு அவர்கள், கானமோகன ம...
மணியம்மாள், டி. என். சுந்தராரவ், ஜெ... மோகன
குப்புசாமி முதலியார் முதலிய நாடக ...ம்பெனி
யார் பலராலும் நடத்திவ...
பார்ஸி நூதன...

4-NOV 192

கோவலன் சரித்திரம்.

முதற் பாகம்.

இது
திருநெல்வேலி மகா-ள-ள-ஸ்ரீ
வித்வான் நாராயணக் கவிராஜரவர்கள்
மாணாக்கரிலொருவரான மகா-ள-ள-ஸ்ரீ
கோட்டாறு வீ. உடையார் பிள்ளை
அவர்களா லியற்றப்பெற்று,

மதுரை, புஸ்தக வியாபாரம்,
இ. ராமசாமிக் கோனாரால்,
மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy Right.

...] 1924 [அணா 2.

031,2x
N24:1
223143

...ந்தகட்சி

லாவணி.

துவாதசாந்த ஸ்தலவாசகர்,

ஸ்ரீமான் பழனிக்குமாரு சுவாமிகள் இயற்றியது.

இதில் காமன் பண்டிகையின் சிறப்பும், மதுரை மஹால் வர்ணனையும், பண்டிகை மேடையின் சிங்காரமும் லாவணி மெட்டுகளில் பாடியுள்ளது. படிக்கப்படிக்கத் தமாஷாய் இருக்கும்.

மன்மதன் இரதி தேவியாரிடம் விடைபெற்றுச் செல்லுங்கால் இருவருக்கும் ஏற்படும் தர்க்கம் விசித்திரமாயிருக்கும்.

இரதி புலம்பல் ஒப்பாரிகள் மிக்க உருக்கமாயிருக்கும். மன்மதன் எரிந்தகட்சிக் கேள்வி லாவணிகள் பாட்டிற் சிறந்தும் புராண ஆராய்ச்சிகள் நிறைந்துமிருக்கும். விலை அணா 6.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

டிராமாச் சரித்திரங்கள்.

வெளியாகி விட்டது! 12-ம் ஒரே புத்தகம் வெளியாகி விட்டது!

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தகம்.

மூர்த்தங்கள்! புத்தகத்திற்கு மூர்த்தங்கள்!!

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்ரம், அல்லியரசாணி சரித்ரம், மயில்ராவணன் சரித்ரம், மதுரைவீரன் சரித்ரம், துரோபதைவஸ்திராபஹரணம், கீசக சம்மாரம், புதிய வர்ணமெட்டு பார்வதி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்ரம், முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்ந்தது.

தற்கால நாகரிக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றது.

விலை ரூ. 1-4-0

விடாநகைப்பை விளைவிக்கும்

விநோதவிகட சிந்தாமணி.

நண்பர்காள்! இதுவரை விகடப்புத்தகங்கள் அநேகம் பார்த்திருப்பீர்கள். ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாய் இராதென்பது திண்ணம்.

விலை அணா 4.

ஷை இரண்டாம் பாகம்.

இதில் விகடப்பிரசங்கத்திற்குரிய கதைகள் ஏராளமாய் அடங்கியுள்ளது. கதைகள் நினைக்குந்தோறும் சிரிப்பை உண்டாக்கும்.

விலை அணா 6

கோமாளிப்பாட்டு விகடமாகவே இருக்கும் அணா 1.

உ

பரமபதி துணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு, ஜி. என். சாமிநாதமுதலியார், கானலோல டி. ஏ. இராஜாமணி அம்மாள் பரதநளின ஜானகியம்மாள், பார்ஸி ஜெகன்மோகன குப்புசாமி முதலியார் முதலிய நாடகக்கம்பெனியார் பலராலும் நடத்தி வருகிற,

பார்ஸி நூதன

கோவலன் சரித்திரம்.

முதல் பாகம்.

விநாயகர் துதி-வெண்பா.

சீராருங் கோவலவன் திவ்யகதை கூறுதற்குத்
தீரா வினையனைத்துந் தீர்த்தருளும்—ஏரார்
பணபதியைப் பூண்டபிரான் பாலகனும் சித்திக்
கணபதியின் தாட்கமலம் காப்பு.

மாதுபாகமானவா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஆதிமூலமானவா வானவா வந்தனம்
மாதுமை மனமிக மகிழுறுந் தாயகா
வா வா வந்தெனை யாண்டருள் விநாயகா
வடிவழகா வினையனுகா
வரமருள்வா யரிமருகா
வல்லபை காதலா சொல்லருந் தீதிலா
மங்களா ஐங்கரா (ஆதி)

யானை மா முகத்தவா அரக்கரை வதைத்தவா
மானில மீதடி யார்கள் தனக்கின்னல்
மாற்றும் ஞானகற் பானுவாய்வந் துதித்தவா
மாசுறையா கோவலனின்
மாசரிதை கூறிடநல்
மதியைஎன் சிந்தையின் மகிழ்வுடன் தந்திடு
வாரடைடை யார்தொழும் (ஆதி)

22343
4-NOV 1924
894.8112
3054
O31,2x

சரஸ்வதி துதி.

அம்மா மதுரை மீனாக்ஷி என்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அம்மா மதுரமார் வாணி - புகல்
அரிய வீணை பாணி அடைந்தேன்
அருமை சேரும் ராணி
அருள் புரி கல்யாணி (அம்)

அன்னவாகனன் மகிழ் தேவி - மெய்
அடியரன் பாய்க் கூவி அழைத்தால்
அவர்களுள்ள மேவி
அமர்ந்திடு சஞ் [illegible] (அம்)

காதிற் கம்மலலங் காரி - விரி
கடல்சூழிப் [illegible] விறைந்த
கலங்கமற்ற நாரி
கவிஞருப [illegible] (அம்)

சா துகுணமுடையார் தாயே - நின்
தாளைப்போற்றி காயேன் கோவலன்
சரிதைகூற நீயே
தயவுசெய்கு வாயே (அம்)

ஸ்ரீ சுப்பிரமணியர் துதி.

மஞ்ஞுகிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

காமனை வென்ருேன் தனையனே அடிபணிந்தேன் இடையூறனு
காமற் செய்ய வேணு மய்யனே தினைக்
கானம் வாழ்குற மாதின்மேலதி காதலால் மணமாலை சூடிய
தந்தனே கண் கண்ட மெய்யனே கருணைபுரி தருணமுரு
கையனே சராற கையனே (காம)

223143

கொண்டல்வண்ணன் தன்மருகனே அமரர்போற்றும் குமா
கொம்பனினி ளையமுருகனே திருக் [ஒற்றைக்
கோதைமாரறுபேர்கள்பாலனே கோதிலாகலை வாணிகேள்வனைக்
குட்டிச் சிறை இட்டவேலனே கொடியசூர ருடைய பேரை
வெட்டியே வதைத்த காலனே (காம)

மங்கைமாரிருவர்நாதனே அறுமுகனே திருமுகனே
வானவர் பணியும் பாதனே விரி
மானிலம்புகழ் கோவலன் கதை நானியம்பிட நீ நலன்புடன்
மாமயிலி லேறியே முந்து மனங்கனிந்து துணைபுரிந்து
மைந்தனுடை யாரை யாள்வந்து (காம)

விவாக மஹோற்சவ மண்டபம்.

[கோவலனுக்கும், கர்ணகிக்கும் திருக்கல்யாணத்
திற்காகக்கோவலன் தந்தை தாயார், பந்துமித்
திரர்கள் முதலாயினோர் சூழ்ந்திருக்கின்றனர்.]

கோவலன் வருகை. சபை வணக்கம்.

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தந்தேன் வந்தனம் இங்கே
தங்கி யிருக்கின்ற சற்சனர் யாவர்க்கும் (தந்)

சாஸ்திர ரம்ப்ர தாயமிக்க
தந்தையர்க்கு மந்தணர்க்கும்
சிந்தையொப்ப வந்தடுத்துத் (தந்)

தமிழறிவு சிறிது மிலேன்
சம்பந்தம் கண்டின்பம்
கொண்டன்பின் பங்கென்றும் (தந்)

சரணம்.

வந்து நேரும் வாய்ச்சொல்லின் தப்பு மன்னிப்பு
வைத்துள்ளம் ஒப்பும்
சந்ததமுங் கவிமுத்து சாமிசரபஞ் செப்பும்
தகமை பெறும் பெரியோரே
பகையகலும் படிநேரே (தந்)

(கோவலன்) தன் தந்தை மாச்சோட்டான்செட்டியார் பாதத்தில் வீழ்ந்துநமஸ்கரித்து, தந்தையே! மைந்தன் கோவலன் நமஸ்கரிக்கின்றேன்.

(மாச்சோட்டான் செட்டியார்) கல்யாண் மைந்தா! சுபமங்களம். சிரஞ்சீவியாக வாழக்கடவது.

(பஞ்சாங்கப் பிராமணுள் அப்பாசாஸ்திரியாரும், குப்பாசாஸ்திரியாரும்) என்ன செட்டியார்வாள்! முகூர்த்த வேளை வந்து விட்டது. மாப்பிள்ளையையும், பெண்ணையும் மணப் பந்தலில் கொண்டு வந்து உட்காரவையுங்கள்.

(மாச்சோட்டான் செட்டியாரும் ஷெயார் மைத்துனர் மாணுக்கன் செட்டியாரும்) சுவாமி! எங்களால் தாமதமில்லை. இதோ அழைத்து வந்தாய்விட்டது. இனி, சாஸ்திரப்படி காரியாதிகளை நடத்துங்கள்.

(அ-கு சாஸ்திரியார்கள்) ஆஹா! அப்படியே (சக்கியம் ஓமம் முதலியவைகள் எல்லாம் வளர்த்து) "சுக்லாம் பரதரம் விஷ்ணு சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்ன வதனம் தியாயே" என்றும் மாங்கல்யத்தைக் கோவலன் கையில் கொடுத்தும் கண்ணகி கழுத்தில் மாலை சூட்டும்படி செய்கின்றனர்) மங்கள வாத்தியங்கள் "தாம் தாம்" என்று முழங்குகின்றன.

கோவலன் மாலை சூட்டுகின்ருன்.

வேணும் வேணும் திருவருள்புரி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-சாப்பு.

சரணம்.

மாசிலாத கண்ணகியா ளெனும் பெண்ணரசியுயர்
அன்ன நடை உடையாள் மேகநிறப்
பின்னற் சடை உடையாள் திகழுறு
மின்னற்கொடி உடையாள் தனை

மங்கள வாத்தியங்கள் கும்கும்மென
மாதவ வேதியர் வாழ்கவென
மாங்கல்யம் யானே இங்ஙனம்தானே
சங்கரன் பாதம் பொங்கமதாகப்
போற்றி போற்றி போற்றி

மாதரசிக்கு யான் சூட்டினேனே
மதிமுக மாதர்கள் கூடவின்னே
வந்த முன்னோர்க்கு வந்தனஞ்செய்தே
சந்ததம் வாழ்க எந்தனெழிற்கைக்
கொண்டேன் கொண்டேன் கொண்டேன் (மாசி)

மாலை சூட்டிய கோவலன் பத்தினியாகிய கண்ணகியோடு தோழர், தோழியரும் எழுந்து, வேதவேதியர் சபையோர் முதலியவர்களுடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிக்கின்றனர். எல்லோரும் "சுபமங்கள முண்டாகுக" என ஆசீர்வதிக்கின்றனர்.

[அறைக்குட் செல்கின்றான்.]

சபையிலுள்ளோர் யாவர்களுக்கும் தாம்பூல சந்தனம் பரிமாறுகின்றார்கள். வேதியர் முதலியோர்களுக்கு அன்னதானம், சொர்னதானம், பூதானம், கோதானம் கொடுத்தனுப்புகின்றனர். (மாச்சோட்டான் செட்டியார் வசனம்) மைத்துனர் மாணுக்கன் செட்டியாரைப்பார்த்து, மைத்துனரே! நமது கல்யாணத்தை ஏராளமான திரவியச் செலவு செய்து, சகல ஆடம்பரத்துடன் நடத்தி விட்டோம். இம்மாதிரி நம்மூரில் இதுவரை யாரும் நடத்தியதில்லை எனக் கீர்த்தி வாய்ந்திருக்கிறதென் றெண்ணுகிறேன்.

(மாணுக்கன் செட்டியார் வசனம்) அத்தானவர்களே! தாங்கள் உரைத்தவை எல்லாம் சரியே! ஆனால் ஓர் காரியம் மட்டும் குறைவாயிருக்கிறது. அதாவது சதிர்க்கச்சேரி நடத்தாமல் இருப்பது பெருங் குறைவென் றெண்ணுகிறேன்.

(மா-செ-வம்) மைத்துனா! ஆம்ஆம் உண்மையே! கட்டாயம் நடத்தியே தீரவேண்டும். அதற்கு எந்ததாசியை அழைக்கலாம்?

(மாணு-செ-வம்) அதென்னவூர்? என்ன திருக்கடையூராம். அந்த ஊரில் 'மாதவி' என்று ஒரு தாசி இருக்கிறாளாம், அவள் மெத்தக் கெட்டிக்காரியாம். நல்லா ஆடுவாளென்று கேள்வி.

(மா-செ-வம்) ஆமாம் நானும் அவ்வாறே அந்த மாதவி என்பவள் ஆடல், பாடல், அபிநயங்களில் மிகக்கீர்த்தி வாய்ந்தவளென்றும் கேள்விப்பட் டிருக்கிறேன். ஆதலால் அவளையே இன்று அழைத்து விடுவோம்.

[மாதவியைச் சதுர்க் கச்சேரிக்கு அழைத்துக்கொண்டு வரும்படி தன் வீட்டுக் கணக்குச் சுப்பாபிள்ளையை அனுப்புகின்றனர்.]

2-வது சீன்.

தாசி மாதவியின் வீடு. திருக்கடையூர்

மாதவி தரு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அச்சாமோரி லாஹீஸே ஹேனுசேன கேனுவா
கேனுவா மோரி கேனுவா (அச்)

ஐம்பூல நைனு ஐம்பூல ப்யாரி
பெகுவான்வி பெகுவான்வி பெகுவான்வி ஹா (அச்)

மைத்தோ யஜார் தமை மைத்தோ பஜாவே
தாராமை தாராமை தாராமை ஹா (அச்)

[மாதவியின் செவிலித்தாய் செல்வம் என்பவளும், மாதவியும் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருந்தனர்.]

(கணக்குச் சுப்பா பிள்ளை) வீட்டில் நுழைந்து, யாரம்மா! இங்கே மாதவி என்பவள் யார்; அவள் வீடெது?

(மாதவிவசனம்) ஐயா! இதுதான் (ஆசனமளித்து) உட்காருங்கள். எந்தவூர் என்ன விசேஷமோ தாங்கள் இங்கு வந்தது?

(கணக்கு-சு-பி-வம்) அம்மா! நாங்கள் காவிரிப்பூம்பட்டினம், மாச்சோட்டான் செட்டியார் வீட்டுக் கணக்கப்பிள்ளை. எங்கள் எஜமானர் குமாரர் கோவலச் செட்டியாருக்குக் கல்யாணம். இன்று சதுர்க்கச்சேரி, உம்மையழைத்து வரும்படி அனுப்பி இருக்கிறார்கள். அதற்காகவந்தோம்;தாம்புறப்படவேண்டும்.

(மாதவி-வம்) ஐயா! யான் வருவதில் தடையில்லை. வருவதானால் தினம் ஒன்றுக்கு லக்ஷம் பொன் தரவேண்டும். அதில் இப்போது ஐம்பதினாயிரம் பொன் கொடுத்து விடவேண்டும். அன்றியும் அவ்விடம் வந்து நான் கேட்கும் கேள்விக் கிணங்கினால் மட்டும் நர்த்தனஞ் செய்வேன். இல்லையேல் இந்த ஐம்பதினாயிரம் பொன்னையும் கொடுத்துவிட்டு வந்து விடுவேன். சம்மதமானால் வருகிறேன்.

(க-சு-வம் தனக்குள்) இதேது பெருத்த அடியா யிருக்கிறதே! என்ன செய்கிறது! கட்டாயம் கூட்டிக்கொண்டே போக வேண்டியிருக்கிறது. அம்மா! நீ உரைத்தது சரி, உன் இஷ்டம் போல் இதோ பொன்களைப்பெற்றுக்கொள். புறப்படுவோம்.

[காவிரிப்பூம் பட்டினத்திற்குப் புறப்படுகின்றனர்.]

3-வது சீன்.

காவிரிப்பூம் பட்டினம்.

கோவலன் விவாஹ மஹோற்சவ மண்டபம்.

[கணக்குச் சுப்பா பிள்ளை மாச்சோட்டான் செட்டியாரிடம் மாதவி கேட்டுக்கொண்ட சமாச்சாரத்தைத் தெரிவித்துக்கொண் டிருக்கின்றார். அவர் அது சரியென்று ஒப்புக்கொள்கிறார்.]

மாதவி கச்சேரிக்கு வருதல்.

இராகம்-இந்துஸ்தான்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

ஜோர் தூர தூரமைஹோ நைகல்ஹாவ் தயாங்கரோ
தோரினாரே ஸாதுஸார பஜன கரத ஹாய் ஹாய் (ஜோர்)

தாஹே நிரஞ்சன தாஹே நிரஞ்சன
தேரிராம ராமநாம பஜன கரத ஹாய் ஹாய் (ஜோர்)

மாச்சோட்டான் செட்டியார் விருத்தம்.

புத்தியிற் சிறந்தே யோங்கும் புகழ்ச்சிசேர் மாயாஜால
வித்தைபோல் நடித்துக்காட்டும் மெல்லிமாதவியாளென்னும்
உத்தமி உந்தன் நெஞ்சில் உள்ளதை உரைப்பா யாகில்
சத்தியமாக ஈய்வோம் தடையின்றி இயம்புவாயே.

(மாச்-செ-வம்) மாதவி! உன் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பா
யாகில் அவ்வாறே செய்து விடுவோம்.

(மாதவி-வம்) ஐயா செட்டியாரவர்களே!

தரு-இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அங்கையில் மாலை பிடித்தெறிவேனது
யார் கழுத்தில் விழுமோ
அவரே என் நாயகர்
அன்பிற் குகந்தவர் சம்மதம்
ஆனல் ஆடுவேன் சதிர் (அங்)

(மாத-வம்) இப்பொன்னுருவி மாலையானது என்னுடன் பிறந்தது.
யான் நிர்த்தனஞ் செய்யும் சமயம் இதை இச்சபையிலுள்
ளோர்கள்மீது வீசியெறிவேன். இது யாருடையகழுத்தில்விழு
கிறதோ அவர்களை யான் அழைத்துக்கொண்டு போய்விடு
வேன். சம்மதமானல், தாம்பூலம் பெற்றுக்கொள்கிறேன்.

(மாணு-வம்) மாதவி! உன் இஷ்டம்போல் செய்யத்தடையில்லை.
நிர்த்தனம் செய்யலாம்; பார்ப்பவர்கள் பிரமிக்கும்படி
செய்யவேண்டும். உனக்கு நாங்கள் அதிகமாகச் சொல்ல
வேண்டியதில்லை. இதோ தாம்பூலம் பெற்றுக்கொள்.

சதிர்க்கச்சேரி.

[சபையிலுள்ள ஒவ்வொருவரும் மாதவி வீசும் மாலையானது
தம்தம் கழுத்தில் விழவேண்டுமெனக் கடவுளை வேண்டிக்
கொண்டும், தலைகளை நீட்டிக்கொண்டும் இருக்கின்றனர்.]

மாதவி நிர்த்தனஞ் செய்தல்.

யா பஞ்சதன் பஜானு என்ற வர்ணமெட்டு.

இராகம்-பார்வி-இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

பல்லவி.

திரு-மீன லோசனியே மிகு
மேன்மையுறுந் திரு மலரடி தருவையே (மீன)

அநுபல்லவி.

தேனுறுங் கூடல் நகர் வாழ்
சிவ சாம்பவி சுந் தரியே
சிறியாளைக்கா மனோ கரியே (மீன)

பாண்டியனீன்ற சேயே
பரிபூரணி வரு வாயே
பரனிடத்தமர்ந்த திரிபுரையே (மீன)

வல்ல மகுடசம் மாரி
மாதங்கியே மிகு வீரி
மருள் நீக்கி அருள் புரிகுவையே (மீன)

மாமணமாலை தன்னால்
மகிழ்ந்தேன் நாளிங் கின்னாள்
மன்னன் கழுத்தில் விழச்செய்குவாய் (மீன)

[மாதவி வீசும் மாலையானது கோவலன் கழுத்தில் விழுந்து விடுகிறது. கழுத்தில் மாலை விழுந்த கோவலனைப்பார்த்து மாதவி ஆசை அடைகின்றாள்.]

விருத்தம்.

கண்ணியமாய் கிற்குமதி ரூபனிவர் மாமதனோ கைலை வாழும்
வெண்ணிலவைச் சூடியநற் சங்கரனோ கலியுகத்து மெய்யன் சுப்ர
மண்ணியனோதேவர்பணியிந்திரனோ முன்னாள்நான் மகிழ்ந்துசெய்த
புண்ணியமே இவ்வுருவா யெந்தன்முன் வந்ததெனப் புகலலாமே.

பேஷ்! ஆஹா! என்ன உருவம்? என்ன பருவம்? என்ன அழகு? நீண்டு சுருண்ட கரிய கூந்தலையும், அன்றுபூர்ந்த அழகிய நெற்றியையும், பரந்த மார்பினையும், நீண்ட கரங்களையும், செந்தா

மரைப் புஷ்பம்போன்ற குளிர்ந்த கண்களையும் பார்க்கும்பொழுதே என் அங்கம் பரவசமாகின்றது. மாதராய்ப் பிறந்தோர் இப்பேர்ப் பட்ட மணவாளனை அன்றோ மணஞ்செய்து வாழவேண்டும். யான் செய்த தவமே மாலையும் அவர்கழுத்தில் விழுந்திருக்கின்றது. அவருக்கு அது தெரியாதுபோலும்! நல்லது அழைக்கின்றேன்.

மாதவி கலித்துறை.

மோவா மலரே நகங்களை யாத மூழுமுறியே
ஆவா கருவி திருவாது பெற்ற அருமணியே
நாவாற் சுவையாப் புதுநறவே செய்த நற்றவமே
வாவா வழகு திரண்டுவந் தாலொத்த மன்னவனே

கோவலனுக்கும் மாதவிக்கும் தர்க்கம்.

தரு.

இராகம்-பார்ஸி-இந்துஸ்தான். தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மா- எழுந்தென்னுடன் வாரும் துரையே
கோ- எங்கெனை அழைக்குறாய் இயம்பு மங்கையே
மா- என்னூருக்குப் போகவே நானழைக் குறேன்
கோ- உன்னூருக்கு வந்தங்கே நா னென்ன செய்வது
கோ- என் வீட்டில் தானே இருப்பீரெப்போ தும்நீர்
மா- எப்போது முன்வீட்டி லிருக்கவேலை என்ன
கோ- இது தெரியாத மனித ருளரோ எழுந்து விரைவில்
வாரும் வாரும்
மா- என்னடி துஷ்டி இரையா தெட்டிநீ செல்லடி செல்லடி
சினமது பெருகுது செல்வாய்

(கோ-வம்) அடி பேதாய் நீயோ வேசி. யானோசெட்டி வர்த்தகன். என்னை உன்னோடு வரவேண்டுமென் றழைப்பது ஞாயமன்று. யானோ மாப்பிள்ளைக் கோலத்துடனிருப்பவன். அன்றியும் உங்கள் குலத்தின் தன்மைகள் எல்லாம் நன்கு யறிந்தவன்.

(மா-வம்) ஆசை நேசா என்ன அறிந்திருக்கிறீர்கள்?

கோவலன் கலித்துறை.

உண்டான சொத்தை அபகாரஞ் செய்ய உமக்கு நிகர்
உண்டா உலகினி லென்றோதி யெல்லா முறிஞ்சி விட்டுப்
பண்டாரமாக்கி அலைந்திடச் செய்யும் பரத்தையரைக்
கண்டாலும் பாவம் கனவிலும் உன்னைக் கருதிடேனே.

பத்தினிச் சாதிப்பெண் மானே என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பத்துப்பணம் கையில்தந்தால் கிட்டவந்தால் மையல்கொண்டால்
பலே சவ்வாசு சவ்வாசு என்பீர் அந்தப்
பயலவன் வறண்டுமே போனல் செயலிலே வெளிநட வென்பீர்
பாசாங்கில் வல்லபக்காரி படு
தாசிகளே மோசக்காரி (பத்)

பித்தளை ஓலையை மினுக்கி முகம் துலக்கி மனம் கலக்கி
பெரும் பேச்சிடுவீர் மோக வலைக்கு அங்கே
பித்துப் பிடித்தவன் வந்தால் சத்தியம் வாங்கிடுவீரே
பேரை மறந்திடச் செய்வீர் சொந்த
ஊரை மறந்திடச் செய்வீர் (பத்)

அங்கத்திற் பாவாடை காட்டி மலர் சூட்டி மையைத் தீட்டி
அன்பா யழைத்திடுவீர் கையை நீட்டி அங்கு
அறியாதவ னானாலும் மரியாதை யொடு பேசி
அப்பொழுதே படுமோசம் செய்வீர்
ஆம் அதனல் பெரும் நாசம்

(கோவ-வம்) மாதவி என்னும் வேசியே! ஒழுங்காகச் சென்றுவிடு.

மாதவி தரு.

ஸ்ரீ ராமச்சந்திரனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பார்வி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மங்கள குண கரனே
மங்கை யர்மனோ கரனே
தங்க நிறமேனி யனே - வா - வா - வா
வாது செய் வதுத காதுநீ
வந்து சேர்வாயிப் போது நீ (மங்)

வந்தால் துரையே நமது
சிந்தை மகிழ்வா யெனது
சொந்த நகரிப் பொழுது செல் வோம் நாம்
மந்தகாச குணனே வருவீர் (மங்)

மன்னவா இப்போதும் மிடம்
சொன்ன மொழிபோ லிவ்விடம்
மாறிடு வாளென்று திடம் கொள்ளாதீர்
விஸ்வாசனே உமக்கேன் யோசனை (மங்)

யோச னையினாலே பிர
யோச னப்படாது பிர
காச னேயெழுந்து விரை வாய் வாரும் (மங்)

(மா-வம்) கண்ணாளா! தாங்கள் எவ்வளவுதான் என்னைக் கடிந்துரைத்தபோதிலும் எனக்குச் சொந்தமாகிவிட்ட தங்களை விட்டுச்செல்வேனென்று கிஞ்சிற்றும் தாங்கள் நினைக்கவேண்டாம். சீக்கிரம் வாருங்கள்; நம்மூருக்குப் போகலாம்.

(கோவ-வம்) அடி துஷ்டி! என்ன வார்த்தை மொழிகின்றனை? கபட்தார் உனக்கு யான் என்ன சொந்தமாகி விட்டேன்? பகட்டினால் பொருள் பறிக்கும் பாதகையே! மாய்கையேயுருவாகி வந்த மாயக்கள்ளி! உன்னை யாளறிவேன். பெண்ணென்று பார்த்தேன். ஒழுங்காய் நீ சென்றுவிடு.

(மா-வசனம்) செல்லமாட்டேன்.

(கோ-வம்) இதோ உன்னை அடித்துத் துரத்தும்படி செய்கிறேன் பார். யாரடா சேவகன்! இவளை உடனே இந்த இடத்தை விட்டு ஓடும்படி அடித்துத் துரத்துங்கள்.

[எல்லோரும் அடித்துத் துரத்த ஆரம்பித்தனர்.]

மாதவிக்கும் கோவலனுக்கும் தர்க்கம்.

உன் பேரென்னடி என்ற வர்ணமெட்டு.

இராகம்-பார்ஸி-கமாஸ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மாத- மன்னா தந்திடுவீர்
கோ- என்ன தான் கேட்கிறாய்

மாத-எந்தன் மாலையை
கோ-உந்தன் மாலை எங்கேயடி
மாத-உம் கழுத்தில் பாரும்
கோ-ஓகோ கோ யீதேது
மாத-உறைமுறை யாரைக்கேளும்
கோ-கேட்ப தென்ன நீ வாங்கிக்கொள்

[கோவலன் மாலையைக் கழற்றிப்பார்க்கிறான். கழற்ற வரவில்லை.]

(கோ-வ-ம்) ஏ ஜெகதீசா! இதேது ஆச்சரியமாய் இருக்கின்றது.

இராகம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

கழுத்தில் விழுந்தமாலை கழற்ற முடியவில்லை
காரிகையே இது யார்சூதோ
கத்தியும் ரம்பமும் வாளுமுனை மழுங்கக்
காரண மென்ன வென்றறியேனே
கல்யாண காலத்திலிந்த வில்லங்கமேது
அல்லலாக வல்லவோ அமைந்ததிப்போது
கைலை வாசா இது நின்னருளோ (கழு)

(கோ-வ-ம்) ஏ கருணாகரா! இதென்ன விபரீதகாலமோ தெரியவில்லை! எத்தனையோ ஆயுதங்களால் அறுத்துப்பார்த்தும் அறுபடவில்லை. இந்த மாலையையும், இம்மாதையும், என்னையும் வருந்தச் செய்வதற்காகச் சிருஷ்டித்தாய்போலும். இதுவும் உன் திருவுளச் சம்மதமோ.

விருத்தம்.

மாலையோ கழுத்தைவிட்டு வருவதற் கேதுவில்லை
மாலையை வாங்கிடாமல் மங்கையும் போவதில்லை
மாலையாய் நேர்ந்த எந்தன் மனத்துய ரேகநாக
மாலையாய் இந்தநேரம் வந்தருள் செய்குவாயே

(கோ-வ-ம்) மாதவி! உன்னாலிடப்பட்ட மாலையைக் கழற்றவே முடியவில்லை. உன்னிஷ்டப்படி உன்கூட வருவதற்கும் என் மனமிடங்கொடுக்கவில்லை. ஆனதால் இவ்விரண்டு விஷயங்களையும் நீக்கி, வேறு எதைச்சொன்னாலும் கேட்கத்தயாராய் இருக்கிறேன்

(மா-வ-ம்) [உடனே மாதவி தான் கொண்டு வந்திருக்கும் வசிய மையை வெற்றிலையில் தடவிக்கொடுக்கத் தீர்மானித்து] பிரியநேயரே! மனது சந்தோஷத்தோடு யான் கொடுக்கும் தாம் பூலத்தையாவது பெற்றுக்கொள்ளுங்கள்.

இராகம்-மோகனம்-சாப்பு.

கண்ணிகள்.

தாம்பூலத்தைத் தரித்துக் கொள்வீரேல்
தையல்நா னேகுவேன் ஐயனே நோவதேன்
தாரணியோர் புகழ் தீரகுணகரா (தாம்)

தருகிற சுருளினைத் திரையேநீ ரருந்திடில்
சடுதியி லென்னூர் சென்றிடுவேன்
தாமதமாகுவ தால்விரை வாய்த்தரும் (தாம்)

பிராணபதி! தங்களுடைய அபிப்பிராயம்போல் என்னோடு வரவும் வேண்டாம். மாலையைத் தரவும்வேண்டாம். நான் தரும் தாம்பூலத்தைத் தரித்துக்கொண்டு, சந்தோஷமாய் விடை கொடுத்தால் போதும். நான் போய்விடுகிறேன்.

[என வெற்றிலையில் மையைத்தடவிக் கொடுக்கிறாள்.]

(கோ-வ-ம்) எங்கே அதையாவது கொடு [என வாங்கித் தின்கின்றான். உடனே மாதவியின்மீது ஆசையுறுகின்றான்] அந்தோ பரிதாபம். யான் அறியாமையாலன்றோ வீணாக மாதவியைத்துன் பம் செய்துவிட்டேன். ஆஹா ஹா! அவள் தாம்பூலம் கொடுக்குங் கால் அவளுடைய அழகிய கரமானது என்மீது பட்டமாத்திரத் தில் ஏதோ ஒருவிதமான இன்பம் நுகர்ந்தேன், கண்மணி மாதவி!

கோவலனுக்கும், மாதவிக்கும் தர்க்கம்.

பார்ஸி தர்க்க வர்ணமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

மாத-போய்வருவேன் சபையோரே போய்வருவேனுன்
கோ-பூவையேநீ என்னைவிட்டுப் போகலாமோதான்
மாத-நியாயமில்லை என்றுமுன்னே நீர்சொல்லியதேன்

கோ-நானெப்போது சொன்னேனடி நாரி பொய்யுமேன்
மாத-நாட்டிலுள்ளோ ரேசுவார்கள் கூட்டி நான்போகேன்
கோ-வாட்டுதடி உந்தனுசைக் கோட்டியானேன்நான்
மாத- நீ வம்புசெய்யாதே
கோ- காசிற் கும்பிட்டேன்மாதே
மாத- இது தெம்புச்சொல்தானே
கோ- எனக் கின்பம்நீதானே
மாத- கிட்டிவா போவோம் (போ)

[மாதவியைப் பின்தொடர்ந்து கோவலன் செல்கின்றான்.]

[கூடியிருந்த சுற்றத்தாரனைவரும் மாதவியையும், அவள் துணைவர்களையும் அடித்துத் துரத்துகின்றனர். அவள் திருக்கடையூரில் தேரோடும் வீதியென்றே சொல்லிக்கொண் டோடுகின்றாள். பின் தடரும் கோவலனை எல்லோரும் நிறுத்திப் பந்தோபஸ்து செய்யும் பொருட்டு ஓரறையில் போட்டுப் பூட்டிவைக்கின்றனர். அவன் அந்நள்ளிரவில் வீட்டின் ஓட்டைப் பிரித்து, வெளியேறித் திருக்கடையூரை நாடிச் செல்கின்றான்.

4-வது ஸீன்.

ஆலமர மென்ற திதுதானோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

திருக்கடையூரென்ப திதுதானோ-இங்கு
தேரோடும் வீதியென்ப திதுதானோ (திரு)

மாதவிவீடென்பது மிதுதானோ-விலை
மாதர் வசிக்குந் தெரு விதுதானோ (திரு)

ஷை தரு வேறு வர்ணமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

திருக்கடையூரதிலே தேரோடும் வீதியிலே
இருக்கிறேனென் றென்னிட மியம்பிய மாமயிலே

உன்வீட்டைத் தேடியல்லோ இவ்வூரெங்கும் சுற்றுகிறேன்
அன்னமே உனைநானெப்போது கண்டெடுந்தனுவலைத்தீர்த்திடுவேன்

(கோ-வ-ம்) நான் செய்த தவமெல்லாம் ஒருருவாய்த்திரண்டு வந்த என்னருமைக்கண்மணியாகியமாதவி! உன்னை இவ்வூரெங்குந் தேடியலைகின்றேன். அகப்படுகின்றாயில்லையே. நீவசிக்கும்மாளிகை எதுவோ தெரியவில்லையே. எனதாசைக்கனியே! எப்போது காண்பேன். [வீதிதோறும் தேடிப்பார்த்து வருகிறான்.]

தேடிக்கொண்டுவரும் கோவலனை மாதவிகண்டு மிக்க உபசரணையோடு தன் வீட்டிற்குள் அழைத்துச் செல்கின்றாள்.

தாயே நமஸ்காரம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

காதலரே வாரும் களிப்புடனுட்காரும்
மாதவியை நீரும் மறந்திட்டீரோகூறும்-மன
வருத்தத்தைத் தீரும் மன
வருத்தத்தைத் தீரும்
வணக்கையினாலெனைத்தழுவி
இணக்கமாய்ச்சேரும் (கா)

கோவலன்.

மானே உன்னைத்தேடி மனம் வருந்தி நாடி
தேனே இங்கு நாடிச் சிறப்புடனே ஓடி வந்தேன்
தேவியே கூடி வந்தேன்
தேவியே கூடி உன்
சிறந்த புயமீதெனைத்தழுவுவாய்
சரக்கீதம் பாடி (மா)

என்னாசை மன்னவா என்ற வர்ணமெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னாசைத்துரையே உமக்
கிந்தவேளை தான் வந்ததோ தயை (என்)

அநுபல்லவி.

மன்னன் வரும்வரை என்னசெய்வோமென
மங்கைநானெண்ணி அங்கம் வாடினேன் (என்)

சரணம்.

ஆனந்தம் பெறுக இவ்
அகிலமெங்கணும் நிறைந்திலங்கி நல்
அன்பர் கட்கருள் நலமளித்திடும்
ஆறுமுகவனைப் பாடியாடிட (என்)

(மா-வம்) என தன்பிற் கிசைந்த அற்புதப் பிரியா! தாங்கள் எப்போது வருவீர்களோ என்ற ஏக்கம் அதிகரித்தவளாய் அன்ன ஆகாரங்களில்லாமல் வழிமேல் விழிவைத்து, எதிர்பார்த்த வண்ணமாகவேயிருந்தேன். இப்போது தங்களைக் கண்டேன், அளவில்லா ஆனந்தங்கொண்டேன். அமருங்கள் இந்த ஆசனத்தின் மீது.

(கோ-வ-ம்) மயிற்சாயலையும், குயிற்றொனியையும் வாய்த்த மாதவி! யானுமவ்வாறே நீ வந்த நாள்முதல் என்மனமானது ஒரு நிலையிலுமில்லை. நிரம்ப அவஸ்தையுற்று இப்போதுதான் சந்தோஷமுற்றேன் கண்மணி! வா இப்படி, என் அருகில் அமரு.

பேசாதிருப்பதேன்ன பெருமையோடி என்ற வர்ணமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

பெண்ணே நவமணியே
பிரியமுற்றேன் மாதே (பெ)

கண்ணே மோகன சரசி எந்தன்
கருத்திற் கிசைந்த பொருந்த மிகுந்த (பெ)

விருத்தம்.

காசினி தனிலெனக்குக் கண்கண்ட தெய்வமான
தாசிகள் குலத்துதித்த தையலே கொஞ்சமேனும்
மாசிலா நற்குணஞ்சேர் மாதவி மானேமிக்க
ஆசையா யிரண்டு பேரும் அனித்தியமான இந்த

வாலிபம் போகு முன்னே
மங்கையே நாம் கூடி
மதனும் ரதியும் போலநாளும்
மகிழ்வாயிருக்க மனதுகந்துமே (பெ)

(கோ-வ-ம்) மாந்தளிர் மேனியாய்! மாதவி! பூரணச்சந்திர பிம்பம் போன்ற உன்னுடைய திருமுகமானது இன்று ஏதோ கொஞ்சம் வாட்டமுற்றிருப்பதாகக் காண்கிறதே! என்னகாரணம்?

(மா-வ-ம்) புண்ணிய மிகுந்த பூபா! தங்களுக்கு ஆசை நாயகியானபின் எனக்கு என்ன வாட்டம்? ஒன்றும் இல்லை. ஆனால் "மாடமாளிகை நமக்கில்லையே" என்று மட்டும் கொஞ்சம் யோசனையி லிருந்தேனல்லாது வேறல்ல.

(கோ-வ-ம்) பேதாய்! இவ்வளவு தானா? இதற்காகவா நீ யோசனை செய்ய வேண்டும்? இதோ உன் இஷ்டம்போல் செய்வதற்கு வேண்டிய திரவியங்களை வரவழைக்கிறேன். இனிமேல் நீ எக்காரணம் பற்றியும் கிலேசமடையாதே நாயகி!

கோவலன் தன் பிதா மாச்சோட்டான் செட்டியாருக்கு லிகிதம் எழுதி அனுப்புதல்.

விருத்தம்.

தருமகுண மேவுமருந் தவம்புரிந்
தெனையீன்ற தந்தையே நின்
திருமலர்ப் பாதத்தை வினயமுடன்
தொழுதெழுதுஞ் செய்தியெந்தன்
அருமைமிகு மாதவியாள் தனக்களிக்க
வகையில்லை யானதாலே
உரிமையுடன் பனிரண்டு கப்பல்நா
ணய மனுப்பி உதவுவீரே.

இங்ஙனம்.
தங்க ளருமைக் குமாரன்,
கோவலன்,
திருக்கடையூர்.

(கோ-வ-ம்) யாரடா? வேலைக்காரன்! இந்த லிகிதத்தைக்காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள என் தந்தையிடம் கொடுத்து, அவர் கொடுக்கும் திரவியங்களை அதிஜாக்கிரதையாகக் கொண்டு வா.

(சே-வம்) அவ்வாறே சென்று, கொண்டு வருகிறேன் பிரபூ!

கோவலன் தரு.

செந்தின்மாநக ரந்தனில் மேவிய என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிக காம்போதி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

நங்கையே உன்னை நான் கண்ட நாள் முதல்
நாட்டங் கொண்டேனடி மானே மன
வாட்டத்தைத்தீர் செழுந் தேனே தந்தை
வம்பினுயிர் வெம்பிவாடிவி
ரும்பியேஉனை நம்பினேனிது
நன்மையான நாளானதால் சுக
ரஞ்சிதமே அன்பாய் நீயே எந்தன்
நெஞ்சமகிழச் செய் வாயே (நங்)

மந்தமாருதம் வீசுவதால் சப்ர
மஞ்சந்தனிலிரு பேரும் சென்றால்
சஞ்சலங்க ளெல்லாந் தீரும் விரி
மானிலம் புகழ் ஓதருங்குண
வான அன்புடை யார்பதந்தனை
மங்களாகர மான பலவித
வாத்தியத்தோடு நாம் பாடி வெகு
கீர்த்தியாய் வாழ்வோம் வி சேடி (நங்)

காவிரிப்பூம்பட்டினம் சென்ற வேலைக்காரர்கள் வந்து
பிரபூ! இதோ பனிரண்டு கப்பல் திரவியம்
தங்கள் தந்தையிடம் வாங்கிக் கொண்டு
வந்து விட்டோம்.

[எனத் தெரிவிக்கின்றனர்.]

(கோ-வ-ம்) மாதவி என்னும் என் அருமை மடமயிலே! இதோ பார் பனிரண்டு கப்பல் திரவியம் வந்து விட்டது. உன் இஷ்டம்போல் ஆடையாபரணதி, மாடமாளிகைகளைப் பெற்றுக் கொள். போதாதென்றால் இன்னும் தருவிக்கிறேன்.

(மா-வ-ம்) கண்ணியம் நிறைந்த கண்ணளா! நிரம்பவும் சந்தோஷம். போதாவிட்டால் பிறகு தருவித்துக்கொள்ளுவோம்.

கோவலன் தரு ஓரடிப்பதம்.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

சல்லாபமாயிருப்போம் வாராய்-எழில்
சந்த்ரவதனியின்று சம்பரமமாகவே (சல்)

அநுபல்லவி.

பொல்லாக் கொடுவரிப் புலியெனச்சீறி
பூங்கணைதொடுத்திடு மதன்பயமீறி
சொல்லாதொழிந்திட வேமனந்தேறி
ஜோக்காயிருவரு மாமஞ்சமேறி (சல்)

சரணம்.

தாளம்பிட்டில் தம்பூர்வீணை
சாரந்தாகெஞ் சரிமுகவீணை
சங்கத்துடனேமோர் சங்கம்போலச்
சலதரங்கமிரு தங்கம்சுரபத
ஐப்ளாக்கட்டை தபிலாப்பானு
எங்கும் புகழொப் பில்லாகிளாரனெட்
இன்பமிகும்பில் லாங்குழல் சித்தார்
இங்கிலீஷார் பிரி யத்திற் கொத்தும்
இசைதனக்குதவி யாகவிருப்பதும்
ஆகிய கருவியி னாலே அமைத்த
சீர்பெறு வாத்தியங்களை ஒன்றுகூட்டி
செவிக்கினி தாம்படி சுதிதனை மீட்டி
பாரில் பிறந்தநற் பலனெனக் காட்டி
பரமசுக மிதுவே என நிலை நாட்டி (சல்)

எல்லோரும்புக ழிந்துஸ்தான் பாட்டு
இங்கிலீஷ் நோட்டுகெட் டிசையும்பாட்டு
தில்லானு டப் பாகெஜல்டோமரி
தென்பாங்குடன் ஏலோலம் சிந்து
ஜாவளி வண்ணம் தமிழ்க் கீர்த்தனைப்பா
சாகித்யம்பதம் தருகளி திருப்புகழ்
லாவணியான வர்ணந்திருதியாக
ராஜய்யர் கீர்த்தனை நன்னயத் தேவா

ரந்திருவாசகம் நற்றிருவருட்பா
விருத்தம் கலிப்பா கட்டளைக் கலித்துறை
வெண்பா ஆசிரி யப்பா சந்த
விருத்தம் பஃறொடைவெண்பா கலித்துறை
மிக்க விசித்திரமுற்றிடு மற்புத
மோகனம் பைரவி பூரி கல்யாணி
முகாரி சுருட்டி தோடி கல்யாணி
இன்னும் பலவித கவிகளுடன் [illegible]
கரகரப்பிரியா [illegible]ஸ்மாஸ் சகாண
காம்போதிகே [illegible]ராமடாண
பரமானந்த பைரவி சிந்து
பைரவியுடன் பூபாள முதலிய
பலபல ராகப்பண்ணுடன் கூடி
பாவலருடையா பதத்தையும் [illegible] (சல்)

(மா-வ-ம்) கண்ணாளா! தாங்கள் அன்பு[illegible]ளைக் கேட்டு, மிக்க ஆனந்தப்பரவசமானேன்.

(கோ-வ-ம்) குயிற்றொனியையும் தோற்கச்செய்யும் தோகையே! நமது அழகிய மாடமாளிகையில் உனது அமுத மொழுகும் குமுதச்செவ்வாயினின்று இராகமாலிகை பாடக் கேட்க வேண்டுமென்று ஆவல் அதிகரிக்கின்றது கண்மணி!

(மா-வ-ம்)நாதா! தாங்கள் விரும்பிய வண்ணமே பாடுகிறேன்.

இராகமாலிகை-தரு.

பல்லவி.

ஜோராகக் கூடிப்பாடுவோம்
சுதியை மீட்டி (ஜோ)

அநுபல்லவி (ஸ்ரீராகம்)

ஸ்ரீராகவன் மருகனை முருகன்மீது
தீதில்லருணகிரி நாதாருளியநற்
றிருப்புகழை மனவிருப்பத்துடனே பலே (ஜோ)

சரணங்கள் (கானடா ராகம்)

நலந் தருங் கானட ஸரமடாண ஈசனை
நன்மனத்தோடு நம் சன்ம பவ மகல (ஜோ)

தோடி ராகம்.

நங்கையே தும்புரு நாரதர் தேவரோடு
நாடியேயிவண்விரைந் தோடிவரும்படியாய் (ஜோ)

மோகன ராகம்.

சாமர்த்தியசாலி சங்கீதத்திலென்றெவரும்
சாற்றிடும்படிமோ கனசரசி யிப்போ (ஜோ)

சாவேரி ராகம்.

விளங்கும்சுயம்ப்ரகாசா வேரியணிந்தசொக்கேசா
வேணமலரணிமீ னாட்சியுடன்வாவென்று. (ஜோ)

கல்யாணி ராகம்.

இனியதொனியுடையகுயிலு முன்னாலேநாணி
நினைவழிந்திடச் செய்யும் சாரீரகுணகல்யாணி (ஜோ)

பைரவி ராகம்.

பைரவி பொற்பாதத்தைப் பணிந்திடும் உடையார்
பதத்தை யன்பாக இருபேரு மாகவே வெகு (ஜோ)

(இருவரும் உல்லாசமாய்க் காலம் கழித்து வருங்கால் ஓர் நாள்)

(மா-வ-ம்) சரச சல்லாபா! நாம் இதுகால பரியந்தம் மிகுந்த அன்புடனேயே உற்சாகமாகக் காலங்கழித்து வந்தோம். ஒருவித மான யோசனை ஒன்றுண்டாகின்றது, சொன்னால் "கேட்பீர்களோ மறுப்பீர்களோ" என்று நினைக்கிறேன்.

(கோ-வ-ம்) குயில் சாயலையும் வெட்கச்செய்யும் மாதவி! ஒரு விதமான யோசனையும் வேண்டாம் நீ

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கோ- என்ன ஏவல் சொன்னாலும் நான்
அன்னமேகேட் பேனின்று

மா- என்னை நீர்கை விட்டிடில் பிழைப்ப
தெங்கேநான் சென்று

கோ- என்ன துன்பம் வந்திட்டாலும்
உன்னைக்கைவி டேனடி

மா- என்றுமுண்மை யாகச்சத்யம்
இப்போதே நீர்செய்குவீர்

கோ- என்ன புதுமை ஓதுகிறாய் மாதவி

மா- இலேயெனில்-மலரணே-மிசையுனே-மருவிட
எனது மனமதிற் கொவ்வாது

பேதமை வாய்ந்துள்ள பெண்மணீ! உன்மனது இன்று இவ்வாருனதுபற்றி நிரம்பவும் ஆச்சரிய முறுகிறேன். ஆயினும் பாவாயில்லே. உன் இஷ்டம்போலவே செய்து தருகிறேன்.

விருத்தம்.

புத்தியிற்சிறந்திலங்கும்பொற்கொடிமாதேகேளாய்
சித்தத்தைதிலேயில்நாட்டிச்சீருடன்போற்றிசெய்யும்
பத்தரைக்காத்தென்நாளும்பாம்பினேயணிந்தாசன்
சத்தியமாக நானுன் தாசனென் றறிகு வாயே.

என்னருமைக்கண்மணியே! நாமிருவரும் உயிரும், உடலும் போலவும், புஷ்பமும் வாசனேயும் போலவும், மணியும் ஒளியும் போலவும், எள்ளும் எண்ணெயும் போலவு மிருக்கிரும். அப்படியிருந்தும் நம்மிருவருக்குள் சத்தியம் வேண்டுமென்றனே. அதனுல் எனக்குச்சந்தோஷமேயொழிய வேறில்லே.

[சந்தோஷமாய்க் காலம் கழிக்கின்றனர்.]

5-வது ஸீன் காவிரிப் பூம் பட்டினம்.

கோவலன் மாளிகையின் பின்புறத்திலுள்ள நந்தவனம்.

[கண்ணகி தன் சகிமார்களுடன் உலாவிக்கொண்டிருக்கிருள்.]

அருமையாய்த்தோணு மிவராரோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

நானிந்தநகரதனில் நந்தவனங்களிலனந்தம்- கண்டு
நாடினேனிதனுக் கீடில்லே வெகு சுகந்தம்

வண்டுமலரில் மதுவுண்டு குலாவுரீங்காரம்-செய்ய
வண்ணத்தோகைவிரித் தென்னவொயிலிடும்மயூரம்

மந்தமாருதமும் வந்துலாசமொடுவீசும் - நல்ல
வஞ்சியர்பழக்கம் பஞ்சவர்ணக்கிளிபேசும்

தாகந்தீர்த்திடுந்த டாகங்காணுமுபயோகம் - நல்ல
சந்தஞ்சொல்லுமுத்து சாமிக்கவிதெளிந்தபாகம்

[கண்ணகி சகிகளோடு உலாவிவருங்கால் பக்கத்தி லிருந்தநிலக்கண்ணாடியை உற்று நோக்குகின்றாள். அவள் கழுத்திலுள்ள தாலி தோற்றுகின்றது.]

(கண்-வம்) சகி! என்னடி ஆச்சரியமாய் இருக்கின்றது?

(சகிகள்-வம்) என்ன அம்மா! என்ன?

கண்ணகி தரு.

பாண்டிய குமாரியான பாவையல்லியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

தையலே கழுத்திலிந்தத் தாலியேதடி
சங்கதிவிபரமாகச் சாற்றுவாயடி
வையகந் தன்னிலேயிந்த வாறுமுண்டோடி எனை
மாலையிட்ட எந்தன் மணவாளனெங்கடி (தை)

(கண்-வம்) அடி! என்கழுத்திலிந்தத் தாலியேது? என்னை அறியாமல் ஏற்பட்டிருக்கிறதே! என்னகாரணம்?

(சகி-வம்) அம்மணீ! தங்களை ஐந்து வயதுப் பிராயத்தில் மாச்சோட்டான் செட்டியார் குமாரர் கோவலச் செட்டியா ரென்பவர் தங்கள் கையில் மாங்கனியைக் கொடுத்து, மாங்கல்யந் தரித்ததாகவும், விவாகசமயத்தில் சதுர்க்கச்சேரிக்கு வந்திருந்த திருக்கடையூர் மாதவி என்ற தாசிமீது நேசமுற்றுச் சென்றிருப்பதாகவும்,எப்போதும் அவளிடத்திலேயே இருந்துவருவதாகவும் சமாச்சாரம் அம்மா!

(கண்-வம்) என்னடி! என்ன ஆச்சரியம்! கேவலம் ஓர் விலைமாது! விலை மாதர்களோ உண்மை விசுவாசமென்பது எள்ளளவுமில்லாதவர்கள். நீதி நியாயம் வரன்முறை என்பதே அறியாதவர்கள். பொருள்கொடுப்போர்களிடத்திலெல்லாம்காதலிப்பவர்கள். புன்னகையாலும், தனபாரங்களாலும், மைவிழிகளாலும் மசக்கி, ஆடவர்களை மயக்குந் தன்மைகள் வாய்ந்த பரத்தையையே சதமென விரும்பி மாழ்கின்றார் என்றால், எனது நாயகரானவர் கல்வி, கேள்விகளிற் சிறந்தவரில்லையோ? ஏ ஜெகதீசா! என் பிராண நாதருடைய மனதை நல்வழியில் எப்போது திருப்புவாயோ தெரியவில்லையே!

தரு ஷெ மெட்டு.

பன்னிருவருடமாக என்னையும் விட்டு
பாதகி மாதவி மீது பாசமே பட்டு
பாவையே சென்றது நியாயமாகுமா
பகருவா யிதற்கோரு பாயம் செய்வோமா (வை)

(சகி-வ-ம்) அம்மணி! அவருடைய தாய், தந்தை உன்னுடைய தாய், தந்தை பந்து, மித்திரர் எல்லோரும் எவ்வளவோ முயற்சி செய்து அழைத்துப்பார்த்தார்கள். ஒன்றும் முடியவில்லை அம்மா! பனிரண்டு கப்பல் திரவியம் அனுப்பும்படிசெய்து, அங்கு அதை வைத்துச் செலவு செய்துகொண் டிருக்கிறாரம்மா!

(கண்-வ-ம்) சகி! யான் ஒரு யோசனை செய்திருக்கின்றேன். அதாவது "நான் மிகுந்த வியாதியால் துன்புற்று, ஜன்னி கண்டு, ஜீவன் பிரியப்போகிறதென்றும், தாங்கள் வந்து முகத்தில் விழித்துத் துளசித்தீர்த்தம் வார்க்க உடனே புறப்பட வேண்டுமென்றும்" எழுதி அனுப்பினால் உடனே புறப்பட்டுவந்து சேருவாரென்றெண்ணுகிறேன். உன் அபிப்பிராயமென்ன?

(சகி-வ-ம்) அம்மணி! ஆம் நல்ல யோசனையே! அவ்வாறே எழுதுங்கள். அதுதான் உத்தமமென்று நினைக்கிறேன்.

கண்ணகி லிகிதம் வரைகிறாள்.

விருத்தம்.

பல்வளஞ்சேர் காவிரிப்பூம் பட்டினநன் னகர்மேவிப்
பரமன் தன்பால்
பத்திமிகு வணிகாது குலத்தினிலுற் பவித்துநலம்
பரவு கின்ற
செல்வமதிற் சிறந்திலகி அறமேசெய் மாச்சோட்டான்
செட்டி மேலோன்
செய்ததவப் புண்ணியத்தா லவதரித்த கோவலநற்
திருநாமத்தோய்

கல்வியுணர் நம்மனைவி கண்ணகியா ளெழுதுகின்ற
கடிதங் காண்க
கலியாணஞ் செய்துபனி ரண்டுவரு டம்வரையும்
கருதி டாமல்
வல்வினையா லெனைவிடுத்தீ ரித்தருணம் ஜன்னியினல்
மடிகின் றேன்யான்
மலர்க்கைசயி னல்துளசி ஜலம்வார்க்க விரைந்திங்கு
வருகு வீரே.

இங்ஙனம் தங்கள் பிரிய நாயகி
கண்ணகி,
காவிரிப்பூம் பட்டினம்.

(கண்-வ-ம்) சகி! இந்த லிகிதத்தை என்நாயகருக்குத் தகுந்த வேலையாள் மூலமாய்க் கொடுத்தனுப்பு. இனி நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றிப் பின் ஆலோசித்துக்கொள்ளலாம். சீக்கிரம் வந்து பதில் தெரிவிக்கும்படி தகுந்த ஏற்பாடு செய்.

(சகி-வ-ம்) அப்படியே அம்மணி!

[லிகிதத்தை வேலை ஆளிடம் சகி கொடுக்கவும், வேலைஆள் கொண்டு செல்கின்றான்]

6-வது சீன்.

திருக்கடையூர் மாதவி மாளிகை.

[கோவலன் மாதவியோடு உல்லாசமாய்ப் பேசிக்கொண் டிருக்கின்றான்]

(கோ-வ-ம்) பிரிய சகி! இன்று நம் வீட்டின் உச்சியில் நச்சுக் கெவுளியானது அடிக்கடி நச்சுநச்சென்று அடித்துக்கொண்டே இருக்கிறது. என்ன சமாச்சாரம் வருமோ தெரியவில்லை.

[கண்ணகியாலனுப்பப்பட்ட லிகிதத்தை வேலையாள் கொண்டு வந்து கொடுக்க, வாங்கிப் பார்க்கின்றான்.]

[கண்ணகி ரூபத்தைக் கண்ணுற்ற கோவலன் முகம் வெளுக்கின்றது. திரேகம் வியர்க்கின்றது. சற்று மூர்ச்சையடைந்து சோர்கின்றான்.]

(கோ-வ-ம்) ஆஹா! கண்ணகி!

அன்புடன் என்மனை செல்லம்மா என்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அன்னமே ஆவி துறந்தாயோ-புவி
ஆசைதனை நீ மறந்தாயோ (அன்)

அநுபல்லவி.

மின்னரசி உனை வேண்டி மணந்த என்
மீது ஏதேது கினைந்தாயோ இந்த
வேளையில்வான் சென்றாயோ மனை
யாளை இழந்தே னையோ (அன்)

சரணம்.

தேன்மொழியே மாலை இட்டது முதல்
திரேகத்தைக் கூடநான் தொட்டது மில்லை
தெய்வமே எவ்வித முய்வேன்நான் முன்செய்த
தீவினையோ இவ்வா றுற்றது உந்தன்
சேதியை நான் கேட்டது மெந்தன்
ஜீவனுடன் திடுக் கிட்டது (அன்)

(கோ-வ-ம்) ஆஹா கண்மணீ! என்செய்வேன்! உன்னை ஐந்து வயதுப் பிராயத்தில் மாங்கனியை உன் கையில் கொடுத்து, யாவரும் புகழ்ந்து மகிழும்படி அக்கினி சாக்ஷியாய் விவாஹஞ் செய்து, அதுமுதல் இதுவரைப் பன்னிரண்டு வருடமாகியும் பிரிந்திருந்து தற்சமயம் உன்னுயிர் பிரியப் போகிறதென்ற துக்கத்துக் கேதுவாகிய கேள்வியை அறிந்த மஹா பாதகனாகி விட்டேன். ஆஹா பெண்மணீ! இப்படியும் நான்முகன் என் தலையில் எழுதினனோ! உன் ஜீவன் அவஸ்தையுறுங்கால் என்னை எவ்வித மெல்லாம் கினைத்துப் பரிதவித்தனையோ தெரியவில்லையே! ஆ! என் செய்வேன்!

(மா-வ-ம்) நாதா! என்ன நிரம்ப வருத்த மடைகின்றீர்கள்?

மாதவி தரு-ராகம்-அடாணு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அடித்த தாரும் மை நீர் அழுவதேனையா
திடுக்கு வருத்தமடைய இந்தச் சோகமேன் மெய்யா (அ)
வடித்த கண்ணீரும் முக வாட்டமாய் நீரும்
வடக்குறைந்தீர் உமதுதேட்டை எடுத்துக்கொண்டவர் யார் (அ)

(கோ-வ-ம்) கண்மணீ! என்னை ஐந்து வயதுப் பிராயத்தில் மாலையிட்ட எனது நாயகியாகிய கண்ணகி பன்னிரண்டு வருடமாகியும் யாதொரு பலனையு மனுபவியாமல் ஜீவன் பிரியும் தருணமாய் இருக்கிறாள். நான்போய் அவளுடைய முகத்தையாவது பார்த்து வரவேண்டும். இதுதான் விஷயம்.

(மா-வ-ம்) நாதா! பேஷ் இப்போதல்லவோ தங்களுடைய சங்கதி வெளியாகின்றது!

தரு-இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

என்னிலு மெத்த அழகுடைய
கன்னிகையோ சொல்லும் மன்னவரே
அன்னவள் செத்தாலும் கவலை எனதை
ஐயனே மெய்யாக விட்டிடுவீர் (என்)

(மா-வ-ம்) பிராணேசா! ஆசை நாயகியாகிய நான் இருக்கும் போது அவள் என்ன? அவளைக் குழந்தையில் கலியாணம் பண்ணினீர்கள். அவள் முகத்தையே பார்த்திருக்க மாட்டீர்கள். அவள் போனால் போகட்டுமே! இதற்காக வருத்தப்படுவானேன்? என் மீது உண்மையான பிரியமுண்டானால் இவ்விதம் என்னை விட்டுப் பிரிந்து புறப்படுகிறேனென்று சொல்லமாட்டீர்க ளல்லவா?

கோவலன் தரு.

பல்லவி எடுப்பு மட்டும் சபரதாஹ என்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சுந்தரியே நீ இந்தவிதம் சொல்லலாமா (சுந்)

அநுபல்லவி, சரணங்கள் அச்சாமோரி வர்ணமெட்டில் கீழடியிலுள்ள மெட்டு.

அநுபல்லவி.

எந்தன் ஜனங்கள்கூடி வந்திருப்பார் கோடாகோடி
பந்தியில் விலக்கியென்னை நிந்தனை புரிவாரடி (சுந்)

சரணங்கள்.

தெள்ளமுதே எந்தனுக்குப் பிள்ளைகிடை யாததினால்
உள்ளபடி நானேசென்று கொள்ளிவைக்கவேணுமடி (சுந்)

(கோ-வ-ம்) கண்மணீ! உனக்கு எவ்விதமான யோசனையும் வேண்டாம். நான் அங்கு சென்று,

கர்மத்தைச்செய்துவிட்டுக் கடுகவருவேனடி
தர்மம் கிடைக்கும்படி தையலேவிடைகொடடி
தாமதமாகுவ தாவின்னு மென்னுளைச் (சுந்)

(கோ-வ-ம்) பெண்மயிலே! லிகிதம்வந்து நிரம்பநேரமாகிவிட்டது. இதற்குள் இறந்தாலும் இறந்திருப்பாள். ஆனதால் நான் சென்று, கரும காரியாதிகளைச் செய்து விட்டாவது தாமதியாமல் வந்து சேருகிறேன். ஐல்தியில் விடை கொடுத்தனுப்ப வேண்டும்.

(மா-வ-ம்) நாதா! நன்றுநன்று! என் தாயானவள் ஆதிமுதல்

நித்திரை செய்வதினாலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம். தாளம்-ஆதி.

கண்ணிகள்.

புருஷர்களை நம்ப லாகா - தென்று
புகன்றமொழியும் வீண் போகா - திந்த
அரிவைமனமெத்த நோகா - தோநீ
ராங்குசென்றுலெந்தன் வாகா

ஆமாம்! புருஷர்களையே நம்பக்கூடாதென்றும், அதில்நான் தங்களையே சதமென நம்பி, வேறு யாரையும் பாராமலிருந்தமையால் உங்களை "நம்பவேண்டாம் நம்பவேண்டாம்" என்றே சொல்லிக் கொண்டு வந்தாள். இப்போதுதான் அது நிஜமென்று தெரிகின்றது. மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம் என்பது சரிதான்.

(கோ-வ-ம்)பிரிய சகி! புருஷர்களை நம்பக்கூடாதென்றுதெரிவிக்கின்றாய். இருந்தபோதிலும் இப்புருஷன் நம்பக்கூடியவன்தான் என்பதும், இல்லை என்பதும் உன்மனமே உனக்குச் சொல்லும். சரி, இனி அதிகம் பேசுவானேன்? அங்கு யான் சென்றபின் அவர்கள் எனக்கு எவ்வித உபசாரஞ் செய்தபோதிலுங்கூட,

தரு.

உன்னைச்சான் மறப் பேனோ - மறந்
தாலென்னுயிர் தரிப் பேனோ - நான்
இன்னுள் வரைபிரிந் தேனோ - உனக்
கிந்தமதிவந்த தேனோ

(கோ-வ-ம்) பெண்மணீ! யான் கட்டாயம் செல்லவேண்டும். இனியாவது விடைகொடு. காலதாமதமாகிறது.

(மா-வ-ம்) நாதா! தங்களை க்ஷணநேரமாவது இதுவரை பிரியாதிருந்து, இப்போது எவ்வாறு பிரிவதென்று என்மனமானது கிரம்ப வேதனையடைகின்றது. தாங்களோ அவசியம் செல்லவேண்டும் என்கிறீர்கள். அதையும் தட்டமுடியவில்லை. தாங்கள் வரும்வரை, தங்களோடு இருப்பதுபோலவே இருப்பதற்கு,

தரு.

பொன்னாலே மின்னுரு வார்த்து - அதைப்
பூவையெந்தனிடம் சேர்த்து -வைத்தால்
அன்பாயதனை நான் பார்த்து - பின்னர்
அளிப்பேன்விடையல்லல் தீர்த்து

கோ:- நல்லது மாதவி மானே - இந்த
நாளிற் பதுமையைத் தானே - எந்தன்
வல்லமையினாலே நானே - கொண்டு
வந்துனக்குத்தரு வேனே

(கோ-வ-ம்) மாதவி! உன்மனம்போலவே எவ்விதத்திலாவது தங்கப்பதுமை செய்து தருகிறேன். அதன்பின்னாலாவது சந்தோஷமாய் விடைகொடுப்பா யன்றோ?

(மா-வ-ம்) தடையில்லை. உடனே செய்து வாருங்கள்.

7-வது ஸீன் கம்மாளத் தெரு.

(கோ-வ-ம்) ஐயா! ஆசாரியர்களே! உங்கள் பட்டறையில் என்னைப்போலொரு பொன்சிலை வார்த்துத் தரவேண்டும். அதி அவசரமாகத் தரவேண்டும். வேண்டிய திரவியம் தருகிறேன்.

(ஆசாரி-வ-ம்)ஐயா! செட்டியாரவர்களே! எங்களால் உடனே செய்துகொடுக்க முடியாது. கொஞ்சம் நாள் செல்லும்.

(கோ-வ-ம்) ஐயா! கருக்கட்டிப் பொன்னை உருக்குங்கள். நான் செய்து விடுகிறேன். (எனக் கண்ணகியை நினைக்கின்ருன்.)

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பத்தினிகண்ணகியே - அடி
பழுதபடாரத்தினமே- நீ
பத்தினியானுமுன் பத்தாவைப்போலொரு
பதுமையுண்டாகவேணும்

[கண்ணகியை நினைத்த மாத்திரத்தில்
வெகு சீக்கிரத்தில் உருவாய்விட்டது.
எடுத்து மாதவியிடம் செல்கிருன்.]

8-வது ஸீன் மாதவி மாளிகை.

(கோவலன் மாதவியிடம் வந்து, கண்மணி! நீ விரும்பிய வண்ணம்

கண்ணிகள்.

பதுமையுண்டாக்கிவைத்தேன் - அதைப்
பார்த்து விடைகொடடி - என்
பத்தினி கண்ணகி செத்தவிடந்தனைப்
பார்த்தோடி வாரேனடி

(மாதவி பதுமையைப் பார்த்து, ஆச்சரிய முற்று) இதேது இவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவந்து விட்டீர்கள்? அது தங்களைப் போலவே பேசுமா? அப்படிப் பேசினுல் தாங்கள் போகலாம்

(கோ-வ-ம்) மாதவி! இன்னும் மனம் வரவில்லையே?

[தனக்குள் கண்ணகியைச் சிந்திக்கிருன்.]

கண்ணிகள்.

பெண்மணியானவளே - மிகப்
பெருமையுடையவளே - உண்மை
பிசகாதமாதானல் பதுமை வாய்திறந்து
பேசவும் வேணுமடி

(பதுமை-வ-ம்) ஏ மாதவி! இனிமேல் கொஞ்சமேனும் தாமதியாமல் கோவலனை அனுப்பிவிடு. இல்லையேல் இந்தத் தடப்பக் கட்டையினுல் உன்னைச் சாத்துவேன்.

(மா-வம்) (தன் தாயைப்பார்த்து) அம்மா! இதென்ன ஆச்சரியம்! இப்பதுமை தடப்பக்கட்டையினு லடிப்பேனென்கிறது. பிராணநாதா! தாங்கள் சென்று காரியாதிகளைப் பார்த்துக் கொண்டு, உடனே வந்துவிட வேண்டும்.

கோ-வ-ம்) நல்லது கண்மணீ! அவ்வாறே போய் வருகிறேன்

[என விடைபெற்றுக் காவிரிப்பூம் பட்டினம் நோக்கிப் பாதைவழியே செல்கின்றுன்.]

9-வது ஸீன் காவிரிப்பூம் பட்டினம், கோவலன் வீடு.

(கண்-வ-ம்) என்னடி சகி! நாம் லிகிதமனுப்பி இதுவரையும் பிராண நாதர் வரக்காணுேமே?

இலங்கேஸ்வரனடி என்ற வர்ண மெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மாதே சிலாக்கிய மன்னனைக் கைவசமாக்கி
வஞ்சவெண்ணங் கொண்ட நெஞ்சகியாகிய
மாதவியாளென்ன மாய்கை செய்தாளோடி (மா)

(கண்-வ-ம்) மாதவி ஏதோ தந்திரஞ் செய்திருக்கிருள் போல் இருக்கிறது. அவற்றை அறிய நனேர் மார்க்கம் செய்கின்றேன்.

அவ் விவர மெல்லாம் அஞ்சன மையால் அறியலாம்
அவள்செய்யும் தந்த்ரம் அறிந்தாலல்லவோடி
அதற்குத் தகுந்த உபாயம் செய்யலாம் (வர)

கண்:—சகி! அஞ்சனமையெடுத்துவா பார்க்கலாம் (வெற்றிலையில் போட்டுப்பார்க்கிறுள்)சகி! அந்த மாதவியின் கெர்வத்தைப் பார்த்தாயா! என் நாதனைப்போல் "தங்கத்தில் பதுமை ஒன்று செய்து தந்தால் மட்டும் விடைகொடுப்பேன்" என்று தெரிவித்து, அதுபோல் செய்தும் வாங்கிக்கொண்டாள். அடி பாதகி! உனக்கு இவ்வளவு கெர்வமா! ஆகட்டும் இப்போது பதுமை எரிந்து பஸ்பீகரமாய்ப் போகும்படி சாபங் கொடுக்கின்றேன்.

கண்ணகி சாபங் கொடுக்கின்றுள்.

நேரிசை வெண்பா.

பூதலத்தோர் மெச்சும் புகழுடைய நற்குணஞ்சேர்
கோதிலா வென்னுதன் கோவலனுர்-மாதவிக்கென்
கற்பின் மகிமையினுல் காதிலுடன் செய்து தந்த
பொற்பதுமா நீ யெரிந்து போ.

10-வது சீன்.

திருக்கடையூர் மாதவி வீடு.

[கண்ணகி சாபத்தால் பொற்சிலை எரிந்து பஸ்பீகரமாய்விடுகிறது]

மா:—அம்மா! அம்மா! என்ன ஆச்சரியமாய் இருக்கிறதே! பதுமை திடீரென்று எரிந்துபோய்விட்டது. மாமா என்ன செய்யலாம்? நீங்கள் தான் இதற்கு ஆலோசனை சொல்லவேண்டும்.

(தா-கி-வ-ம்) ஆமடி ஆமா! "அவன் மாயக்காரன். அவனை நம்பாதே" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தேனே! பார்த்தாயா! அவன் இதற்கேதாவது தந்திரம் செய்திருப்பான்.

மா:—ஆகட்டும் ஆகட்டும்! அவர் மந்திரத்தையும், தந்திரத்தையும் இப்போது பார்க்கிறேன். மாமா! இப்போது தான் கொஞ்சதூரத்தில் போய்க்கொண்டிருப்பார். நான் பாம்பு கடித்திறந்துவிட்டதாக ஒரு லிகிதம் கொடுத்தனுப்புகிறேன். கொண்டு கொடுக்கும்படி செய்யியுங்கள்; உடனே அவர் ஓடி வந்துவிடுவார்.

(டா-மா-வ-ம்) மாதவி! நல்லயோசனை செய்தாய்! "இறந்த பிற்பாடுலிகிதம் எவ்வாறெழுதினள்" என்றால் என்ன சொல்கிறது?

(மா-வ-ம்) மாமா! உயிர்போகும் தருணத்தில் எழுதினதாகச் சொல்லுகிறதுதானே? இது ஒரு பிரமாத யோசனையா?

(டா-மா-வ-ம்) சரி உடனே எழுது.

மாதவி லிகிதம் எழுதுதல்.

விருத்தம்.

வேதன்முன் னுளமைத்த விதியினு லெனதுபிராண
நாதரே கொடியதான நஞ்சர வங்கடித்து
வேதனைப் பட்டுநானிவ் வேளையில் மடியப்போரேன்
ஆதலி னுல்விரைவா யன்பரே வருகுவீரே.

அன்புள்ள மாதவி.

[வேலைக்காரன் வசம் லிகிதத்தை அனுப்புகிருள். கொண்டு செல்கின்றான்.]

11-வது சீன்.

காவிரிப்பூம் பட்டினத்துக்குச் செல்லும் பாதைவழி.

(சே-வ-ம்) ஐயா! செட்டியாரவர்களே! நிரம்ப அவசரம். இந்த லெட்டரைப் பார்க்க வேண்டும்.

[லிகிதத்தைப் பார்த்த கோவலன் வருத்தமுற்றுப் புலம்புகிருன்.]

தேராசச்சநஹிகைனரோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-சாப்பு.

பல்லவி.

மாண்டனளோ ஆசைதந்த மாதவியாள்
மானிலவாழ்வைவிடுத்து வஞ்ச அரவங்கடித்து (மா)

அநுபல்லவி.

ஆண்டவர்தலைவிதி அமைந்ததோஇவ்வாருக
ஆருத்துயரத்தினுல் அகமுமிகவும்நோக
ஆனதே என்செய்வேன் அருமையிற்சிறந்தவள் (மா)

சரணம்.

சென்றந்தரத்திலோடிச்	சிறும்பயிரியரச்சே
கொன்றிட வேடன்வில்லைக்	குறியும் பிடிக்கலாச்சே
என்றுபரதவிக்கும்	ஏழைப்புறுப்போலாகா
என்னபாவஞ் செய்தேனோ	பெண்ணரசி என்னைவிட்டு (மா)

ஏ ஜெகதீசா! அனாதரட்சகா! கண்ணகி மாண்டாளென்று கவலையுற்றுத் தாயில்லாக் கன்றைப்போல் தவித்து வரும் வழியில் திடீரென்று இடிவிழுந்தாற்போல் மாதவியும் மாண்டாளென்று லிகிதம் வந்ததே! இதனை யாரிடம்சென்றுமுறையிடுவேன். என்கதிஇவ்விதமாகவா வந்து நேர்ந்தது? பாம்பு கடித்திறந்தவர்கள் பன்னிரண்டு தினங்களுக்குப் பின்னும் விஷம் நீங்கிப் பிழைத்திருப்பதாகக் கேள்வியுற்றிருக்கிறோம். ஆகவே மாதவியாவது உயிர்பெற்றெழும்படி விஷமிறங்க ஏதேனும் ஏற்பாடு செய்யச் சென்றுபார்ப்போம்.

12-வது சீன்.

திருக்கடையூர் மாதவி வீடு.

ஆறுமா ஐயோநான் கொண்டதுயர் தீருமா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாதகி-பரிதாபப்	படச்செய்தாயே-சாதகி
படிமீதிலிப்	படிக்காகிதம்
படுபாவியும்	எழுதாரடி (பா)

மாயமா-இவ்வஞ்சத்தொழில்செய்வது		நியாயமா	
மதியோ	தலை	விதியோ	கால
கதியோ	யாரும்	மதியாக்	கொடு (பா)

(கோ-வ-ம்) மாதவி! நான் எவ்வளவோ மனவருத்தத்தோடு கொந்து ஆத்திரமாகச்செல்லுங்கால் நீ இவ்விதமாகச்செய்யலாமா?

(மா-வ-ம்) ஆமாம்! நீர் மாத்திரம் நிரம்பச்சாமர்த்தியம் கற்றவர். நீர்கொடுத்த பதுமையைப்பாரும். இவ்விதம் செய்வீரென்று

முன்னமேயே தெரிந்திருந்தால், இந்த இடத்தைவிட்டு ஒரு அடி யாவது அப்பால், எடுத்துவைக்க விட்டிருப்பேனா?

(கோ-வ-ம்) (பதுமையைப் பார்த்து) ஆஹா ஹா இதென்ன ஆச்சர்யம்! மாதவி! காரணம் ஒன்றும் தெரியவில்லையே. போனாற் போகட்டும். நான் போய்வந்து, என்ன வேண்டுமானாலும் செய்து தருகிறேன். இப்போது நீ சந்தோஷமாய் விடைகொடு.

மா:—நல்லது! நல்லது!

தரு.

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

போகவிடைதர வேண்டுமென்றாலும
தாடைசுழற்றிக் கரத்திற்கொடும்
பூவையரா ளென்மனம் போலத்தராவிடில்
புண்ணியரே இங்கிருந்துவிடும் (போ)

நீர் அவசியம் போகவேண்டுமென்றால் உமது ஆடையாபர ணங்களெல்லாம் கழற்றிக் கொடுத்துவிடும் போகலாம்.

கோவலன் தரு.

அப்படியேதரு கின்றேனானாலும்நீ
அன்புடனேக விடைகொடடி
அங்குசென் றுகர்மம் யாவும் செய்துவிட்டு
அன்னமேவாரே னென்னை விடடி (அப்)

கண்மணீ! உன் அபிப்பிராயம் போலவே ஆடை யாபரணங்க ளெல்லாம் இதோ பெற்றுக்கொள். நான் சென்று வருகிறேன்.

மாதவி தரு.

பத்துலக்ஷம்பொன் தருவீரானாலுமக்
கிக்ஷணமேக விடையளிப்பேன்
உத்தமரேயிதற் குத்தரம் சொல்வீர்
ஒருநொடியிற்சஞ்ச லமொழிப்பேன் (பத்)

பேஷ்! ஆடையாபரணாதிகளைக் கொடுத்துப் போய்விடலா மென்று பார்க்கின்றீரோ? பத்துலக்ஷம்பொன் தந்துவிட்டுத்தான் போகவேண்டும்; இல்லாவிட்டால் போகக்கூடாது.

கோவலன் விருத்தம்.

பத்தநூ றாயிரம்பொன் பாவையே தருவதற்கு
இத்ததி யென்னிடத்தி லேதொரு கெதியுமில்லை
சித்தம்போல் பொன் னுனக்குச் செலுத்தாமற் பெண்ணேயுந்தன்
சத்தியமாகச் சொன்னேன் சாதம்கா னருந்திடேனே

பெண்ணே மாதவி! இன்னும் உன்மன மிரங்கவில்லையா! நான் சென்று காரியாதிகளை முடித்துக்கொண்டு, எந்த விதத்திலாவது பத்துலக்ஷம்பொன் உனக்குத் தந்தாலன்றி யான் போஜனம் புசிப்பதில்லை. இதுவே சத்தியம். இனியேனும் விடைகொடு.

மா:—ஆனால் சென்றுவாரும்.

[கோவலன் காவிரிப்பூம்பட்டினம் செல்கிறான்.]

13-வது சீன்.

காவிரிப்பூம் பட்டினம்-கோவலன் வீடு.

[கோவலன் வீட்டினுள் நுழைகிறான். யாதொரு விசேடத்தையும் காணோம். அந்தப்புரத்தில் வீற்றிருந்த கண்ணகி எழுந்து வந்து பாதத்தில் வீழ்ந்து வணங்குகிறாள்.]

தேகோ - பாலம்கே - நாகராவ் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாஸ். தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

நாதா என்வந்தனம் நாதா என்வந்தனம்
நத்தியே இத்தினம் வந்தனம்
பாதாரம்கண்களில் பன்னிருவருடமாய்ப்
பார்க்கா திருந்தேன் பாவியான் பாதஞ்
சேர்க்கா திருந்தீர் தேவியான்
செங்கையைக் கூப்பினேன் பொதுமங்கையை நோக்கினீர்
செப்புமொருமொழி ஒப்புடனே இன்று (நாதா)

கண்:—நாதா! நமஸ்கரிக்கின்றேன்.

கோ:—கண்மணி! இவ்வாறு லிகிதம் விடுத்தகாரணம் என்ன?

கண்:—என் ஆருயிர்க் காதலா! தாங்கள் என்னை ஐந்து வயதில் மாலையிட்டு வைத்துவிட்டு, மாதவியின் மையலால் அவளையே தஞ்சமென்றடைந்து விட்டீர்கள் இதுவரை வருடம் பன்னிரண்டாகியும் என்னைக் கிஞ்சிற்றுவது நினைக்கவில்லை. இனியாவது தங்கள் திருமுகத்தைப்பார்த்து, ஆனந்திக்கலாமென இந்த லிகிதம் எழுதினேனல்லாது வேறல்ல. யான்செய்த இப்பெருங்குற்றத்தை மன்னித்து, இதனாலேற்பட்ட மனவாட்டத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று அடியாள் கேட்டுக்கொள்கிறேன் நாதா!

கோ:—பெண்ணே! விதிவசம் யாரையும் விடாது. என் செய்யலாம்? இனி இதைப்பற்றி நீ ஒன்றும் ஆலோசிக்காதே.

[களைப்புற்றுவந்த கோவலனுக்குக் கண்ணகி அறுசுவையோ டன்னம்படைக்கின்றாள். ஸ்நானம் பூசை முடித்துவந்த கோவலன் போஜனத்தில் கையைவைக்கவும் மாத விக்குக்கொடுத்துவந்த சத்தியத்தை நினைத்து எழுந்து விடுகிறான்.]

கண்:—பிராணநாதா! என்ன வருத்தத்தோ டெழுந்துவிட் டீர்கள்? ஏன் அன்னமுண்ணவில்லை?

அச்சாமேரிலாகீஸே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அன்னமதை உண்ணாமல் மன்னவா நீர் வந்ததேன்
வந்ததேன் மனம் நொந்ததேன்
சின்னப்பிராயமதில் என்னை நீர்மாலையிட்டு
பன்னிரண்டாண்டாகியும் பரத்தைமே லாசைப்பட்டு
என்னைப்பிரிந்தீரென்று சொன்னமனஸ்தாபமோ
எனதாசை மணவாளா அதிவேகமாகவே (அன்)

கண்:—என் அருமை நாயகா! தங்களைக்கண்டது முதல் கண்ணில்லாதவனுக்குக் கண் கிடைத்ததுபோலும், சூரியனைக் கண்ட தாமரைபோலும், பசியினால் வருந்துபவனுக்குத தேவா மிர்தம் கிடைத்ததுபோலும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்த என் மனமானது நிரம்பவும் வாதனையடைகின்றதே. போஜனத்தி லுட்காந்தவர்கள் திடீரென் றெழுந்துவிட்டீர்களே! என்?

(கோ-வ-ம்) கண்மணி! மாதவியிடத்தினிலிருந்து உன்னிடம் வருங்கால் "பத்துலட்சம் பொன் கொடுத்தாலன்றி விடமாட் டேன்" என்றாள். அதன்பின் அவ்வாறே சம்மதித்துப் பொன்னைக் கொடுத்துப் போஜனம் புசிப்பதாகச் சத்தியம் செய்துவந்தேன். அது எனக்கு இப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. அதை நான் நிறைவேற்றாது போஜனம் புசித்தால் பாழ்நரகிற்காளாவேன்.

போனால்வருமோ வாலிபசுகம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

பெண்ணேபொன் கொடுத்தாலன்றிச்சாதம்
உண்ணேனடி பிடிவாதம்

அநுபல்லவி.

உன்னோனடி தக்க யோசனை இங்கிதற்
கேதேனு மோர்வழிநீதான் சொல்லவேண்டும் (பெண்)

விருத்தம்.

காதலி யெந்தனுசைக் கண்ணகி மானேயந்த
மாதவி மீதிலாணை வைத்துநான் வந்தேன்மேலும்
வாதவள் கடனைத்தீர்க்கும் வரையிலு முறுதியாகச்
சாதம்கா னருந்தமாட்டேன் தையலே ஆதலாலே

சரணம்.

உன்னுபரணமேதேனும் கையில்
உண்டாலதைத்தந்திடு வாய்
முன்னாள் பெரியோர் மொழிந்த சத்திய
முறையிற் சிறிதும் தவறலாகாது (பெண்)

கோ:—பிராணகாந்தி! உலகத்தில் "வாய்மை தவறி நடப்போர் நூறு பசுக்களைக் கொன்ற பாவத்தை உடையோர் அடையும் நரகத்தை அடைவார்" என்று, சாஸ்திரங்களினுல் அறிந்திருக்கிறோம். கடனை நிறைவேற்றுவதற்கு வழியில்லாது தயங்குகின்றேன். ஆதலால் உன்னிடத்திலுள்ள ஆபரணங்களி லேதேனும் ஒன்றை ஈந்தால், விற்றுக் கடனைத்தீர்த்துவிட்டு, பிறகு வந்து அன்னம் புசிப்பேன் கண்மணீ!

கண்:—பிராணநாதா! என்னிடத்தில் அவ்வளவு விலை உயர்ந்த ஆபரணம் ஒன்றுமில்லையே!

கோ:—எ கலைமதி முகத்தாய்! உன் பாதங்களிலுள்ள பொற்சிலம்புகளி லொன்றே போதுமானது.

கண்:—பிராணநாதா! அச்சிலம்பானது கழற்றுவதற்குத் திருகாணியே இல்லாதிருக்கிறது. எவ்வாறு கழற்றுவது? அது யான் பிறக்குங்கால் என்னுடன் பிறந்ததாய் இருக்கிறதே!

கோ:—கற்பினுக் கருங்கலமே! கங்கையணிந்திடு செஞ்ச...யீசனைக் கருத்திலுன்னிக் கழற்றுவையேல், உடனே கழன்று ...ம் கண்மணி! நீ கழற்றிப்பார். அது தானே கழலும்.

(கண்ணகி கழற்றிக்கொடுக்கிறாள். அசரீரி வசனம்) இந்தச்...பை விற்பதற்குப் பாண்டிய நாடாகிய மதுரைக்குமட்டும் ...கக்கூடாது. மீறிப்போனால் பெரும் ஆபத்து நேரிடும்.

கண்:—நாதா அசரீரி வாக்கைக் கவனித்தீர்களா?

கோ:—கண்மணி! அதையெல்லாம் நீ யோசிக்க வேண்டாம். எல்லாம் பிராரத்வ கன்மம்போல் நடக்கும். நம்முடைய செயலாலாவது ஒன்றும் இல்லை.

கண்:—அப்படியானால் நானும் கூடவருவேன்.

கோ:—கண்மணீ! நீ இவ்விடத்தில் தானேயிரு. நான் சென்று அதிசீக்கிரத்தில் விற்று வருகிறேன்.

கண்ணகி தரு.

ஜப்தகலந்தரு பனுதரு பிரதர என்றவர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

வல்லப மிகுந்தகிரி புயபல னேயெந்தன்
மன்னவா உம்முடன் வருவேனே
அல்லல்செய்யாமலேநீ ரழைத்துக்கொண்டேகவேணும்
அண்ணல் மலரடி பணிந்தேனே

கோ-அரிவையே மிருகங்கள் சஞ்சாரங்க ளனேகம்
கண்-தெரிகுவீர் பயப்படேன் கூட்டிச்சென்றால்யோகம்
கோ-சீரல்ல கண்ணகியே
கண்-தீரா பிரியே னென்றைக்கும்
கோ-சேதிசொல்வேன் வெய்யில் மழை காற்றி லிவ்வாயே
கண்-செம்மலேநான் வெய்யில் மழை எதையும் பாரேனே (வல்)

கோவலன் தரு.

வஞ்சியேஉன் சேஞ்சரணம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-[illegible]-தாளம்-ஆதி.

அரிவையேநீ [illegible] வருகுவது
சரியலடி [illegible] தெரிகுவையே
அன்புடனே [illegible] விடைகொடடி (அரி)

வெய்யலின் [illegible] லயோ உந்தன்
மெய்யுமிக [illegible] னையுமடி
வெம்பி மிக [illegible] னொந்திடுவையே (அ[illegible]

பொன்சிலம்பை [illegible] பொன்வணிகர்
மன்னர் சபை [illegible] கொண்டுசெல்வேன்
பெண்பால் நீ [illegible] வாலாகுமா [illegible]

முதல்பாகம் முற்றிற்று.